**செய்தி வெளியீடு எண்: 912** **நாள்: 13.12.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 12.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், சேலம், சேகோசர்வில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு ஏல மையம் மற்றும் மதுரையில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாய்கோ வங்கியின் புதியதாக அமைக்கப்பட்ட 47வது கிளை ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

சேகோசர்வ் என அழைக்கப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கமானது, இந்தியாவிலேயே முதன்முதலாக ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் பொருட்களின் விற்பனைக்காக துவங்கப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கமாகும். 1981–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இச்சங்கம், ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் வியாபாரத்திலுள்ள இடைத்தரகர்களை நீக்கி மரவள்ளிக்கிழங்கிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வழிவகை செய்வதுடன், உறுப்பினர்களுக்கு சந்தை வசதி, கடன் வசதி மற்றும் கிடங்கு வசதி அளிக்கவும் வழிவகை செய்கிறது. தற்போது, இச்சங்கத்தில் 381 பதிவு பெற்ற உறுப்பினர்கள், சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஜவ்வரிசி மற்றும் மாவு உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

2017–18ஆம் ஆண்டிற்கான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மானியக் கோரிக்கையின் போது, தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் சேகோசர்வில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு ஏல மையம் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, சேலம், சேகோசர்வில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 40 கணினிகள் கொண்ட ஏல மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இதன் மூலம் வியாபாரிகள் இணைய வழியாக உலகின் எந்த பகுதியிலிருந்தும் ஏலத்தில் கலந்து கொண்டு பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், மதுரையில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாய்கோ வங்கி எனப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் 47–வது கிளையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., சேகோசர்வ் தலைவர் திரு.என். தமிழ்மணி, சேகோவர்ச் மேலாண்மை இயக்குநர் திரு.என். சதீஷ், இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**